மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இந்திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

(இ) வழுக்குப்பாறை அணைத் திட்டம் ரூபாய் 50 லட்சம், வரட்டுப் பள்ளம் அணை திட்டம் ரூபாய் 60 லட்சம்.

திரு. ஏ. எம். இராஜா: இந்த வழுக்குப்பாறை வரட்டுப்பள்ளம் திட்டம் வந்தால் பவானி வட்டத்தில் பெரும் பகுதிகள், வறட்சிப் பகுதியாக இருக்கிற அந்தப் பகுதிகள் நல்லமுறையில் பயனடைய முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக செயல்படுத்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வழுக்குப்பாறைத் திட்டத்தில் சுமார் 200 ஏக்கர் வனத்துறை நிலங்கள் நீர்பிடிப்பால் பாதிக்கப்படுவதால் வன இலாகா ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஒப்புதல் கிடைத்தவுடன் இத் திட்டம் பற்றிய அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்பிக்கவேண்டுமென்று தலைமைப் பொறியாளர் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மதிப்பீடு பற்றி வருவாய்த் துறை வாரியம், வனத்துறை தலைவர் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் வேலையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படும்.

Intensive Banana Plantation in Dharmapuri District

* 273 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have any scheme to start Intensive Banana Plantation in Dharmapuri District; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rental flats in Government Estate

* 274 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Secretariat staff have requested the Government about the 22nd August-September 1970 for the construction of rental flats in the Government Estate, Mount Road, Madras; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) அரசு எஸ்டேட்டில் உள்ள வெற்று நிலம் அரசின் காரியங்களுக்காகத் தேவைப்படுவதால் அதைச் சங்கத்துக்கு அளிக்க இயலாது. எனவே சங்கத்தின் வேண்டுகோள் தள்ளுபடி செய்யப்பட்டது.